இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 06-09-2024

# புல்டோசர் மாநிலங்கள்!

சட்டவிரோதச் செயல்களையே சட்டபூர்வமாகச் செய்வதில் கைதேர்ந்தவை பா.ஜ.க. ஆளும் மாநிலங்கள்.

**உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், குஜராத் ஆகிய பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களில் சட்டத்தின் மூலமாக அல்லாமல் 'புல்டோசர்' மூலமாக ஆட்சியை நடத்தி வருகிறார்கள். இந்திய ஜனநாயக ஆட்சி முறைக்கு பா.ஜ.க. அளித்து வரும் கொடை இவை. பா.ஜ.க.வுக்கு எதிராகப் போராடுபவர்கள் மீது வழக்குப் போடுவதோடு, அவர்களின் வீடுகளையே இடித்து விடுவார்கள். இதை நியாயப்படுத்துவதற்காக, குற்றச் சம்பவங்களில் ஈடுபடும் சிலரது வீடுகளையும் இடித்து கணக்கு காட்டிக் கொள்கிறார்கள். 'எல்லார் வீடுகளையும்தான் இடிக்கிறோம்' என்ற பசப்புக்காக!**

இது உச்சநீதிமன்றம் வரை சென்றுள்ளது. ஜாமியாத் உலாமா – ஐ – ஹிந்த் என்ற அமைப்பு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது. **"அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக டெல்லி ஜஹாங்கீர் புரியில் உள்ள போராட்டக்காரர்களின் வீடுகள் இடிக்கப்பட்டுள்ளன. குடியிருப்புவாசிகளுக்கு உரிய முன்னறிவிப்பு ஏதும் அளிக்காமல் இதுபோன்ற நடவடிக்கைகள் செய்யப்படுகின்றன. இதுபோன்ற நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்க வேண்டும்"** என்று அந்த மனுவில் சொல்லப்பட்டு இருந்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான பிருந்தா காரத்தும் மனு தாக்கல் செய்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு டெல்லி ஜஹாங்கீர் புரியில் நடந்த ஒரு ஊர்வலத்தின் போது வகுப்புவாத வன்முறைகள் நடைபெற்றன. அதன்பிறகு அந்தப் பகுதி வீடுகள் விதிமுறை மீறிக் கட்டப்பட்டவை என்று சொல்லி இடிக்கப்பட்டன. உச்சநீதிமன்ற உத்தரவுக்குப் பிறகு இடிப்பு நடவடிக்கை தடுக்கப்பட்டது. அப்போது சம்பவ இடத்துக்கு வந்து போராட்டம் நடத்தினார் பிருந்தா காரத். வழக்கும் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.ஆர்.கவாய், கே.வி.விஸ்வநாதன் அமர்வு முன் நடந்தது. எந்தெந்த மாநிலங்களில் இதுபோன்ற புல்டோசர் வைத்து வீடுகள் இடிக்கப்பட்டன என்பதற்கான ஆதாரம் கொண்ட புகைப்படங்களை மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தாக்கல் செய்தார். **'அரசுக்கு எதிராகப் போராடுபவர்களுக்கு புல்டோசர் நீதி வழங்கப்படாது என்ற அரசுத் தரப்பு அறிக்கையை நாடு முழுமைக்கும் பதிவு செய்ய அறிவுறுத்த வேண்டும்'** என்று மனுதாரர் தரப்பில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர் துஷ்யந்த் தேவ் கூறினார்.

**நீதிபதிகள் கேட்ட கேள்விகள் மிக மிக முக்கியமானவை. "குற்ற வழக்கில் தொடர்புடையவர் அல்லது குற்றவாளி என்பதற்காக ஒருவரின் வீட்டை எப்படி இடிக்க முடியும்? உரிய சட்ட நடைமுறைகளைப் பின்பற்றாமல் இதுபோன்று செய்ய முடியாது. இது தொடர்பாக நாடு முழுமைக்குமான வழிகாட்டுதல்களை உச்சநீதிமன்றம் வகுக்கும்" என்று எச்சரிக்கை செய்துள்ளார்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள்.**

உத்தரப்பிரதேச மாநில அரசின் சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா வாதிட்டார். 'ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் என்ற அடிப்படையில் ஒருவரின் வீட்டை எப்படி இடிக்க முடியும்?' என்று நீதிபதி பி.ஆர்.கவாய் கேள்வி எழுப்பினார். 'குற்றம் சாட்டப்பட்டவர் என்பதற்காக அவருக்குச் சொந்தமான எந்தக் கட்டடத்தையும் இடிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. கட்டடத்தை இடிப்பதற்கான நோட்டீஸ் கொடுத்துள்ளோம்' என்றார் சொலிசிட்டர் ஜெனரல். நோட்டீஸ் கொடுத்தால் அது சட்டபூர்வ நடவடிக்கை ஆகிவிடும் போல!

"தொழில்முறைக் குற்றவாளிகள் மற்றும் மாஃபியாக்களுக்கு எதிரான நடவடிக்கை இது" என்று உ.பி. மாநில அரசு வெளிப்படையாக நியாயப்படுத்தியது.

புல்டோசர் வைத்து யாருடைய வீடுகளை இடித்தார்கள் என்பதை 'பி.பி.சி.' செய்தி நிறுவனம் பட்டியலிட்டுள்ளது.

- ★ **இசுலாமிய சமூகத்தினர் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார் மனித உரிமை ஆர்வலர் ஜாவேத் முகமது. அவரைக் கைது செய்தது உ.பி. அரசு. அவரது வீட்டை புல்டோசர் கொண்டு இடித்தார்கள்.**
- ★ **சமாஜ்வாடி கட்சிப் பிரமுகரான ஹாஜி ரஸாவின் வணிக வளாகம் இடிக்கப்பட்டுள்ளது.**
- ★ **உ.பி. மாநிலத்தில் செல்வாக்கு கொண்ட அதிக் அகமதுவின் உறவினர்களது வீடுகள் இடிக்கப்பட்டுள்ளன.**
- ★ **மத்தியப்பிரதேசத்தில் ஒரு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட காங்கிரஸ் கட்சிப் பிரமுகர் ஹாஜி ஷாஜாத் அலி வீடு இடிக்கப்பட்டது.**
- ★ **2022 ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மூன்று மாதங்களில் இந்தியாவின் ஐந்து மாநிலங்களில் புல்டோசர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்கிறது சர்வதேச மனித உரிமை அமைப்பான 'அம்னஸ்டி இண்டர்நேஷனல்'.**

– இப்படி பல்வேறு மாநிலங்களில் இவை நடந்துள்ளன. அசாம் மாநிலத்தில் மீன் வியாபாரியான சஃபிகுல் இஸ்லாம் வீடு இடிக்கப்பட்ட வழக்கு கவுகாத்தி உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. தலைமை நீதிபதி ஆர்.எம். சாயா, **"மிகத் தீவிரமான வழக்குகளை விசாரணை செய்யும் போது தேடுதல் என்ற பெயரில் புல்டோசர்களைக் கொண்டு வீடுகளை இடிக்க எந்த குற்றவியல் சட்டமும் பரிந்துரைக்கவில்லை"** என்று சொன்னார்.

அவர் இன்னொரு கேள்வியையும் கேட்டார், **"நாளைக்கு உங்களுக்கு ஏதாவது தேவை என்றால் என்னுடைய நீதிமன்ற அறையையும் இடித்துவிட்டு தேடுதல் நடத்துவீர்களா? தேடுதல் என்ற பெயரில் ஒருவருடைய வீட்டை இடிக்க அனுமதி வழங்கினால் யாருக்கும் இங்கே பாதுகாப்பு இருக்காது. நாம் ஜனநாயக நாட்டில் வாழ்கிறோம். இது போன்ற வீடுகளை இடிக்கும் சம்பவம் எல்லாம் சினிமாவில்தான் நடக்கும். அப்போதும் 'வாரண்ட்' காண்பிக்கப்படும். வீடுகளில் தேடுதல் நடத்துவதற்கு அந்த வீட்டை இடிக்கத்தான் வேண்டுமா? சட்டம் - ஒழுங்கு என்று ஏன் சேர்த்துச் சொல்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்"** என்று கவுகாத்தி உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள் கடுமையாக உத்தரவிட்டார்கள்.

குற்றங்களுக்குத் தண்டனை வழங்குவது வேறு, வீடுகளை இடிப்பது வேறு. 'குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டாலும் வீட்டை இடிக்க முடியாது' என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள்.

**உ.பி. முன்னாள் முதலமைச்சரும் சமாஜ்வாடி கட்சித் தலைவருமான அகிலேஷ் இப்படிச் சொல்லி இருக்கிறார்: 'அநீதியின் புல்டோசரை விட நீதியின் அளவு பெரிது!'**

## நமது கழகம் மேலும் ஓர் நூற்றாண்டு உறுதியான கொள்கைப் பயணத்தைத் தொடர

# தங்களின் (முதல்வரின்) சலியா உழைப்பு அடித்தளமிடும்!

## இனமானப் பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச்செல்வன் – முதல்வருக்கு நெகிழ்ச்சிக் கடிதம்!

**சென்னை, செப். 6-**

**அமெரிக்கச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, இனமானப் பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச் செல்வன் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில்,**

**"நமது கழகம் மேலும் ஓர் நூற்றாண்டு உறுதியான கொள்கைப் பயணத்தைத் தொடர தங்களின் (முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின்) சலியா உழைப்பு அடித்தளமிடும்!" என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களுக்கு, அ.அன்புச் செல்வன் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

அன்பு நண்பர் - தலைவர் - முதல்வர் ஸ்டாலின் அவர்களே,

இனிய வணக்கம்,

'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்ற பொன்மொழிக்கு ஏற்ப, தமிழகப் பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமிழக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெருக்கவல்ல அந்நிய முதலீடுகளை ஈர்க்க அமெரிக்கா சென்றுள்ள தங்களை அயலகத் தமிழர்கள் வாஞ்சையுடன் வரவேற்கும் காட்சிகளை சமூக வலைதளங்களில் தாங்கள் தினமும் பதிவிடுவதைக் கண்டு மகிழ்கிறேன்.



திராவிட இயக்கத்தின் வித்துகள் 'தொப்புள் கொடி உறவுகள்' பலர் - சிறந்த மருத்துவர்களாக, விஞ்ஞானிகளாக, மென்பொறியாளர்களாக - இன்ன பிற தொழில் முனைவோராக அந்நாட்டில் சிறப்பாக வாழ்ந்து வருகிறார்கள், அத்தகையவர்கள் தங்கள் வருகையைப் பற்றி தத்தமது மகிழ்வினைத் தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

ஆளில்லா கார் பயணமும், சிகாகோ நகரில் தாங்கள் சைக்கிள் ஓட்டியதும், அதைப் பற்றிய திரு. ராகுல் காந்தி அவர்களின் பதிவும், பலரின் தூக்கத்தைக் கெடுத்து வருகிறது.

பவள விழாக் காணும் நமது இயக்கம் மேலும் ஓர் நூற்றாண்டுக்கு தனது உறுதியான கொள்கைப் பயணத்தைத் தொடர, தங்களின் சலியா உழைப்பு அடித்தளமிடும்!

'மக்கட்பணி செய்வதே எனது வாழ்க்கை' என்று உறுதியுடன் பாடுபடும் தங்களுக்கு மீண்டும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வாழ்க, வெல்க தி.மு.க.!**

**வெல்க தங்களின் தமிழர் தொண்டு!**

இவண்,

**அ. அன்புச்செல்வன்**

05.09.2024

இவ்வாறு அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்டத்தில் 'நமக்கு நாமே' திட்டத்தில், பல்வேறு பணிகளுக்காக சன் டி.வி. குழுமம் சார்பில் ரூ.2 கோடியே 93 லட்சத்து 50 ஆயிரத்திற்கான காசோலையை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மற்றும் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் முனைவர் ஜெ.யு. சந்திரகலா ஆகியோரிடம் சன் டி.வி. குழுமத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி.காவேரி கலாநிதி மாறன் அவர்கள் வழங்கினார்.

## கோவை, கொச்சுவேலிக்கு சிறப்பு ரயில்! சென்ட்ரல், தாம்பரத்தில் இருந்து இயக்கம்!

சென்னை, செப். 6–

விநாயகர் சதுர்த்தி பண்டிகை நாளை 7ம் தேதி கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு, பயணிகள் வசதிக்காக, சென்னையில் இருந்து கோயம்புத்தூருக்கும், தாம்பரத்தில் இருந்து செங்கோட்டை வழியாக கொச்சுவேலிக்கும் சிறப்பு ரயில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன் விவரம் வருமாறு: சென்னை சென்ட்ரலில் இருந்து செப்.6ம் தேதி பிற்பகல் 3.45 மணிக்கு அதிவிரைவு சிறப்பு ரயில்(06151) புறப்பட்டு, அதே நாள் இரவு 11.45 மணிக்கு கோயம்புத்தூரை சென்றடையும். மறுமார்க்கமாக, கோயம்புத்தூரில் இருந்து செப்.8ம் தேதி இரவு 11.30 மணிக்கு அதிவிரைவு சிறப்பு ரயில் (06152) புறப்பட்டு, மறுநாள் காலை 7.35மணிக்கு சென்ட்ரலை வந்தடையும்.

இந்த ரயில் பெரம்பூர், திருவள்ளூர், அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட்டை, சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய நிலையங்களில் நின்று செல்லும். தாம்பரத்தில் இருந்து செப்.6, 13, 20 ஆகிய தேதிகளில் இரவு 7.30மணிக்கு வாராந்திர சிறப்பு ரயில் (06035) புறப்பட்டு, மறுநாள் முற்பகல் 11.30 மணிக்கு கொச்சு வேலியை சென்றடையும். மறுமார்க்கமாக, கொச்சுவேலியில் இருந்து செப்.7, 14, 21 ஆகிய தேதிகளில் பிற்பகல் 3.35 மணிக்கு வாராந்திர சிறப்பு ரயில் (06036) புறப்பட்டு, மறுநாள் காலை 7.35மணிக்கு தாம்பரம் வந்தடையும்.

இந்த ரயில் செங்கல்பட்டு, மேல்மருவத்தூர், விழுப்புரம், விருத்தாசலம், அரியலூர், ஸ்ரீரங்கம், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சங்கரன்கோவில், பாம்புகோவில் சந்தை, கடையநல்லூர், தென்காசி, செங்கோட்டை, தென்மலை, புனலூர், கொல்லம் உள்ளிட்ட நிலையங்களில் நின்று செல்லும். இதே மார்க்கத்தில் மற்றொரு சிறப்பு ரயிலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு ரயில்களுக்கான டிக்கெட் முன்பதிவு தொடங்கி உள்ளதாக தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

